# சேவா வாணி

## ஜூன் - 2026



ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவனங்கள் (இந்தியா)

தமிழ்நாடு - தெற்கு

# பிரேம தாரா

(பகவான் பாபா தனது மாணவர்களுக்கு எழுதிய கடிதங்களின் தொகுப்பு)

அன்பிற்குரியவர்களே!
எனது ஆசிகளையும் அன்பையும் ஏற்றுக் கொள்ளுங்கள்.
ஒவ்வொருவரும் அகங்காரத்திலிருந்து பிறக்கிறார்கள்; அகங்காரத்திலேயே வாழ்ந்து, வந்து செல்கிறார்கள். கொடுக்கிறார்கள், பெறுகிறார்கள்; சம்பாதிக்கிறார்கள், செலவிடுகிறார்கள்; பொய் பேசுகிறார்கள் அல்லது உண்மையைப் பேசுகிறார்கள் - இவை அனைத்தையும் அகங்காரத்துடனேயே செய்கிறார்கள்.

சொர்க்கமும் நரகமும், அவதாரங்களும் கூட அகங்காரத்துடன் தொடர்புடையவையே. அகங்காரத்திலிருந்து தோன்றும் இவை எதுவும் விடுதலையை அளிப்பவை அல்ல.

தங்களுடைய அகங்காரத்தை முற்றிலும் நீக்குகிறவர்களே முக்தியை (வீடுபேற்றை) அடைகிறார்கள்.

இறைவன் என்றென்றும் உண்மையானவர்; உயர்ந்தவற்றிற்கும் மேலானவர். ஆனால் நீங்கள் உங்கள் அகங்காரத்தை நசுக்கி, அவரை உணர வேண்டும்.

அவர் உங்களுக்குள் இருக்கிறார்; உங்களுடன் இருக்கிறார்; உங்களைச் சுற்றியும் இருக்கிறார்.
மகிழ்ச்சியாக இருங்கள்.
அன்புடனும் ஆசிகளுடனும்,

**- பகவான் ஸ்ரீ ஸத்ய ஸாயி பாபா**

ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவனம், தமிழ்நாடு தெற்கில் இருந்து **3** பிரிவுகளிலும் மொத்தம் **65** தனித்துவமான செயல்பாடுகள் **ஜூன் 2026** நடந்தன

| ஆன்மிகப் பிரிவு | சேவைப் பிரிவு | கல்விப் பிரிவு |
|---|---|---|
| 20 | 31 | 14 |

# பொருளடக்கம்


திருப்பூர் ........ 5
திருச்சி ........ 15
கோயம்புத்தூர் ........ 22
தேனி ........ 36
கன்னியாகுமரி ........ 37
காஞ்சிபுரம் தெற்கு ........ 40
திண்டுக்கல் ........ 51
திருவண்ணாமலை ........ 58
ஈரோடு ........ 65
காஞ்சிபுரம் வடக்கு ........ 82
தூத்துக்குடி ........ 91
தஞ்சாவூர் ........ 97
சேலம் ........ 99

# இலவச கண் சிகிச்சை முகாம்

திருப்பூர் | 07.06.2026 | 190 பயனாளிகள்

மாதாந்திர இலவச கண் சிகிச்சை முகாம் ஜூன் 7, 2026 அன்று மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இதில் 190 பேருக்கு கண் பரிசோதனை செய்யப்பட்டது. அறுவை சிகிச்சைக்கு 42 பேர் அழைத்துச் செல்லப்பட்டனர். மேலும், 85 பேருக்கு கண் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

# இலவச டேலி பயிற்சி வகுப்பு

திருப்பூர் | 11.06.2026 | 8 பயனாளிகள்

பகவானின் பேரருளினால் 11.06.2026 வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு ஸ்ரீ சத்ய சாய் திறன் மேம்பாட்டு மையத்தின் சார்பில் மகிளா யுவதிகளுக்கான டேலி (TALLY) பயிற்சி வகுப்பு துவங்கப்பட்டது. இந்தப் பயிற்சி வகுப்பு வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9.30 மணி முதல் 11.00 மணி வரை நடைபெறும்.





# 108 ருத்ர பாராயணம்

திருப்பூர் | 14,28.06.2026 | 50 சேவாதளத்தொண்டர்கள்

பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபா அவர்களின் நூறாவது பிறந்த தின ஜன்மோத்சவ கொண்டாட்டங்களின் ஒரு அங்கமாக, திருப்பூர் மாவட்டத்தில் 108 கோவில்களில் ருத்ர பாராயணம் செய்வது என முடிவு செய்யப்பட்டு இனிதே நடைபெற்று வருகிறது.

இந்த மாத நிகழ்ச்சிகளில், 81-ஆவது ருத்ர பாராயணம் ஜூன் 14 அன்று கருவம்பாளையம் வெடதலங்காடில் அமைந்துள்ள காசி விசாலாட்சி உடனமர் காசி விஸ்வநாதர் ஆலயத்தில் நடைபெற்றது. 82-ஆவது ருத்ர பாராயணம் கருவம்பாளையம் அயன் நகரில் உள்ள மீனாட்சி சுந்தரேஸ்வரர் சன்னதியில் நடைபெற்றது.

83-வது ஏகாதச ருத்ர பாராயணம் ஜூன் 28 அன்று கரப்பாடி எனும் ஊரில் 1500 ஆண்டுகள் பழமை வாய்ந்த, மும்மூர்த்திகளும் சுயம்புவாக எழுந்தருளியுள்ள அமணலிங்கேஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்றது. 84-ஆவது ருத்ர பாராயணம் பச்சார் பாளையத்தில் உள்ள சிவன் கோவிலில் நடைபெற்றது.

# ஸ்ரீ சத்ய சாயி வித்யா ஜோதி வகுப்புகள்

திருப்பூர் | 15,16.06.2026

165 பயனாளிகள் | 46 சேவாதளத்தொண்டர்கள்

திருப்பூர் மாவட்டம் குமார் நகர் மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் ஸ்ரீ சத்ய சாய் வித்யா ஜோதி வகுப்புகள் 15.06.2026 அன்று இனிதே தொடங்கப்பட்டன. வகுப்பின் முன்னோட்டமாக, மனித மேம்பாட்டுக் கல்வி குறித்த அறிமுக வகுப்பு, குழந்தைகளின் பெற்றோர் மற்றும் பள்ளி நிர்வாகிகள் முன்னிலையில் திருப்பூர் மாவட்டத் தலைவர் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் இவ்வகுப்பின் சிறப்புகள் மற்றும் அவசியம் குறித்து பெற்றோருக்கு எடுத்துரைக்கப்பட்டது.

இதில் கல்வி, ஆன்மீக மற்றும் யுவதியர் அணிப் பொறுப்பாளர்கள், காந்தி நகர் அமைப்பாளர், பள்ளித் தலைமை ஆசிரியை, பள்ளி நிர்வாகிகள் மற்றும் பெற்றோர் என 46 பேர் கலந்து கொண்டனர். பிரதிவாரம் செவ்வாய்க்கிழமை காலை 11.30 மணி முதல் 12.30 மணி வரை வகுப்புகள் நடைபெறும். அதன்படி ஜூன் 16 அன்று வகுப்புகள் தொடங்கப்பட்டு, 165 குழந்தைகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.





TNSED
18|9|2025
Thursday.
You are kind

# பள்ளிகளில் இலவச கண் சிகிச்சை முகாம்

திருப்பூர் | 17,18,19,25,30.06.2026 | 4759 பயனாளிகள்

ஆண்டுதோறும் திருப்பூர் மாவட்டத்தில் நடைபெறும் அரசுப் பள்ளி மாணவ, மாணவியருக்கான இலவச கண் சிகிச்சை முகாம் இந்த ஆண்டும் நடைபெற்று வருகிறது. இதன் ஒரு பகுதியாக, முதலாவது கண் சிகிச்சை முகாம் திருப்பூரில் உள்ள மங்களம் அரசு மேல்நிலைப் பள்ளியில் ஜூன் 17 அன்று நடைபெற்றது. இதில் 1180 குழந்தைகளுக்குப் பரிசோதனை செய்யப்பட்டு 58 குழந்தைகளுக்குக் கண் கண்ணாடிகள் வழங்கப்பட்டன. 16 குழந்தைகள் மேல் சிகிச்சைக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.





# பிரேம தரு விதைப்பை மற்றும் விதைப்பந்து சேவை பணி

திருப்பூர் | 21.06.2026 | 34 சேவாதளத்தொண்டர்கள்

பிரேம தரு நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக, ஜூன் 21, 2026 ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி முதல் மரக்கன்றுகள் நடுதல், விதைப்பை மற்றும் விதைப்பந்து தயாரிக்கும் சேவை, பல்லடம் ரோடு யூனிட்-2 சமிதி நாகராஜ் சாய்ராம் இல்லம் அருகில் உள்ள பூங்காவில் இனிதே நடைபெற்றது.

இதில் பாலவிகாஸ் மாணவர்கள் 237 விதைப்பந்துகள் மற்றும் சுமார் 200 விதைப்பைகளைத் தயார் செய்தனர். இந்நிகழ்வில் 20 பாலவிகாஸ் மாணவர்கள், 10 ஆடவர் மற்றும் 4 மகிளாக்கள் என மொத்தம் 34 பேர் கலந்து கொண்டனர்.

## 108 திருவிளக்கு பூஜை

திருப்பூர் | 19.06.2026 | 15 சேவாதளத்தொண்டர்கள்

58-ஆவது திருவிளக்கு பூஜை 19.06.2026 வெள்ளிக்கிழமை, மகிளா தினத்தன்று காந்திநகர் சமிதியில் காலை 10.25 மணி முதல் 11.30 மணி வரை சிறப்பாக நடைபெற்றது.

## நாராயண சேவை

திருப்பூர் 28.06.2026
125 பயனாளிகள் 15 சேவாதளத்தொண்டர்கள்

28.06.2026 அன்று காலை 9.00 மணி முதல் 10.30 மணி வரை தொடர் பஜன் மற்றும் மங்கள ஆரத்தி நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து, 125 உணவுப் பொட்டலங்களை வழங்கி நாராயண சேவை செய்யும் நல்வாய்ப்பினை திருப்பூர் சத்ய சாய் இளைஞர்கள் பெற்றனர்.





# பல்லக்கு சேவை

**திருப்பூர்** | **29.06.2026** | **40 சேவாதளத்தொண்டர்கள்**

ஆனி மாத பௌர்ணமி பல்லக்கு சேவை வடக்கு திருப்பூரில் அமைந்துள்ள நெருப்பெரிச்சல் கிராமத்தில் உள்ள ஸ்ரீ சத்ய சாய் பஜனா மண்டலியில் 29.06.2026 அன்று மாலை 6 மணிக்கு மேல் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சி கிராமப்புறத்தில் நடைபெற்றதால், பொதுமக்கள் சுவாமி தரிசனம் செய்து, சுவாமியின் திருவுருவப் படமும் விபூதி பிரசாதமும் பெற்றுச் சென்றனர். இதில் 40-க்கும் மேற்பட்ட சகோதர சகோதரிகள் கலந்து கொண்டு தெய்வீக அனுக்கிரகத்தைப் பெற்றனர்.






# 100 நாட்கள் மோர் விநியோக சேவை

திருச்சி

05.03-15.06.2026

6 சேவாதளத்தொண்டர்கள்

திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கம் ஸ்ரீ சத்ய சாய் சேவா சமிதியின் சார்பில் 05.03.2026 முதல் 15.06.2026 வரை தொடர்ந்து 100 நாட்கள் மோர் விநியோக சேவை மிகச் சிறப்பாக நடைபெற்றது. இச்சேவையின் வெற்றிக்கு ஒவ்வொரு நாளும் அர்ப்பணிப்பு உணர்வுடன் சேவையாற்றிய சேவாதளத்தொண்டர்களின் பங்களிப்பு அளப்பரியது.

தினந்தோறும் மூன்று ஆண் சேவாதளத்தொண்டர்களும், மூன்று பெண் சேவாதளத்தொண்டர்களும் இச்சேவையில் பங்கேற்று, பக்தியுடனும் ஒழுக்கத்துடனும் தன்னலமற்ற சேவையைச் சிறப்பாக ஆற்றினர்.

# 101வது இலவச மருத்துவ சேவை முகாம்

திருச்சி | 15.06.2026
162 பயனாளிகள் | 6 சேவாதளத்தொண்டர்கள்

15.06.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று புதுக்கோட்டை மெயின் ஸ்ரீ சத்ய சாய் சேவா சமிதி மற்றும் குழிபிறை நகரத்தார் இணைந்து, குழிபிறையில் 101-வது இலவச மருத்துவ சேவை முகாமை மிகச் சிறப்பாக நடத்தினர்.

இம்மருத்துவ முகாமில் 4 தகுதி வாய்ந்த மருத்துவர்கள் கலந்து கொண்டு, பொதுமக்களுக்கு விரிவான மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொண்டு, தேவையான மருத்துவ ஆலோசனைகளையும் சிகிச்சை வழிகாட்டுதல்களையும் வழங்கினர். இம்முகாமில் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த 80 ஆண்கள் மற்றும் 82 பெண்கள் என மொத்தம் 162 பயனாளிகள் கலந்து கொண்டு, தங்களுக்குத் தேவையான மருத்துவ ஆலோசனைகளையும் இலவச மருந்துகளையும் பெற்றுப் பயனடைந்தனர். இப்புனிதமான மருத்துவ சேவை முகாமில் 6 சாய் சேவாதளத்தொண்டர்கள் பங்கேற்று, நோயாளிகளை வரவேற்று வழிநடத்துதல், பதிவு செய்தல், மருத்துவர்களிடம் முறையாக அழைத்துச் செல்லுதல் உள்ளிட்ட அனைத்து ஒருங்கிணைப்புப் பணிகளையும் அன்புடனும் கனிவுடனும் சிறப்பாக மேற்கொண்டனர்.

# காயத்ரி ஜெபம்

திருச்சி | 28.06.2026 | 25 சேவாதளத்தொண்டர்கள்

திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கம் ஸ்ரீ சத்ய சாய் ஆன்மீக மையத்தில் எழுந்தருளி அருள்பாலிக்கும் காயத்ரி தேவி சன்னதியில், 28.06.2026 அன்று காலை 6.30 மணிக்கு காயத்ரி ஜெபம் பக்திபூர்வமாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் 25-க்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டு, மனமுருகி காயத்ரி மந்திரத்தை ஜெபித்து ஆன்மீகப் பேரின்பம் அடைந்தனர். ஜெப நிகழ்வின் நிறைவில், பகவானின் அருட்பிரசாதமாக அனைவருக்கும் காலை சிற்றுண்டி அன்புடன் வழங்கப்பட்டது. பகவானின் அருளால் நடைபெற்ற இப்புனித ஆன்மீக நிகழ்வு, பக்தர்களிடையே இறையுணர்வு, மன அமைதி மற்றும் ஆன்மீக ஒற்றுமையை மேலும் வலுப்படுத்தியது.

# நித்திய நாராயண சேவை

திருச்சி

40 பயனாளிகள் 6 சேவாதளத்தொண்டர்கள்

திருச்சி மாவட்டம் பாலக்குறிச்சி ஸ்ரீ சத்ய சாய் சேவா சமிதியில் ஜூன் மாதம் முழுவதும் நித்திய நாராயண சேவை மிகச் சிறப்பாக நடைபெற்றது. இச்சேவையின் மூலம் தினந்தோறும் 40-க்கும் மேற்பட்ட நாராயணர்கள் பகவானின் அருட்பிரசாதமான அன்னத்தைப் பெற்றுப் பயனடைந்தனர்.

இப்புனித சேவையில் தினமும் 3 ஆண் சேவாதளத்தொண்டர்களும், 3 பெண் சேவாதளத்தொண்டர்களும் அர்ப்பணிப்பு உணர்வுடனும் அன்புடனும் கலந்து கொண்டு, நாராயணர்களுக்கு உணவு வழங்குதல் உள்ளிட்ட அனைத்து சேவைப் பணிகளையும் மிகச் சிறப்பாக மேற்கொண்டு வந்தனர்.

பகவானின் அருளால் தொடர்ந்து நடைபெற்று வரும் இந்நித்திய நாராயண சேவை, “மானவ சேவையே மாதவ சேவை” என்ற பகவானின் தெய்வீகப் போதனையை நடைமுறைப்படுத்தும் சிறந்த சேவையாக விளங்கி வருகிறது.

# மகிளா தின சிறப்பு நாராயண சேவை

திருச்சி 19.06.2026

திருச்சி மாவட்டத்தின் பல்வேறு சமிதிகளின் சார்பில் இரவு சிற்றுண்டி வழங்கும் சேவை அன்புடனும் பக்தியுடனும் நடைபெற்றது. கே.கே. நகர் ஸ்ரீ சத்ய சாய் சேவா சமிதி சார்பில், அன்னை இல்லத்தில் 200 இட்லிகளும், பார்வையற்றோர் இல்லத்தில் 100 இட்லிகளும் சாம்பார் மற்றும் சட்னியுடன் வீட்டிலேயே சுத்தமாகத் தயாரிக்கப்பட்டு அன்புடன் வழங்கப்பட்டன.

கல்லுக்குழி ஸ்ரீ சத்ய சாய் சேவா சமிதி சார்பில், 250 இட்லிகள் தயாரித்து தேவையுடையோருக்கு வழங்கப்பட்டன. புதுக்கோட்டை மெயின் ஸ்ரீ சத்ய சாய் சேவா சமிதி சார்பில், நேசக்கரம் முதியோர் இல்லத்தில் தங்கியிருந்த 45 நபர்களுக்கு இரவு சிற்றுண்டி அன்புடன் வழங்கப்பட்டது.





## பாலவிகாஸ் குரூப்-1 குருமார்களுக்கான பயிற்சி முகாம்

திருச்சி | 07.06.2026 | 80 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பெருங்கருணையால், திருச்சி மாவட்ட பாலவிகாஸ் குரூப்-1 குருமார்களுக்கான பயிற்சி முகாம் 07.06.2026 அன்று ஸ்ரீரங்கம் அருணா நகர் ஸ்ரீ சத்ய சாய் ஆன்மீக மையத்தில் சிறப்பாக நடைபெற்றது. இப்பயிற்சி முகாமில் திருச்சி மாவட்டத்தின் அனைத்து சமிதிகளிலிருந்தும் 80 பாலவிகாஸ் குருமார்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

இந்நிகழ்ச்சியில் மாநில கல்வி ஒருங்கிணைப்பாளர், முன்னாள் மாநில கல்வி ஒருங்கிணைப்பாளர், திருச்சி மாவட்டத் தலைவர் மற்றும் திருச்சி மாவட்ட கல்வி ஒருங்கிணைப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டு குருமார்களுக்கு வழிகாட்டுதல்களையும் ஊக்கமளிக்கும் கருத்துரைகளையும் வழங்கினர்.

பயிற்சியின் போது பாலவிகாஸ் மாணவர்களுக்கு ஸ்லோகங்கள் கற்பித்தல், கதைகள் கூறுதல், பஜனைகள் கற்பித்தல் ஆகியவை செயல்முறை விளக்கங்களுடன் எடுத்துரைக்கப்பட்டன. மேலும், தியானத்திற்கு முன்னோடியாக மௌனமாக அமர்ந்து மன

ஒருமைப்பாட்டை வளர்த்துக் கொள்வதன் அவசியம் மற்றும் குழு விளையாட்டுகள் மூலம் மாணவர்களின் பண்புகளை மேம்படுத்தும் வழிமுறைகளும் செயல்முறைப் பயிற்சி மூலம் வழங்கப்பட்டது.

பகவானின் அருளால் நடைபெற்ற இப்பயிற்சி முகாம், பாலவிகாஸ் குருமார்களின் கற்பித்தல் திறனையும் ஆன்மீகப் பண்புகளையும் மேம்படுத்தி, குழந்தைகளுக்கு மதிப்புக் கல்வியைச் சிறப்பாக வழங்குவதற்கான பயனுள்ள வழிகாட்டும் நிகழ்வாக அமைந்தது.





# பிரேம தரு

கோயம்புத்தூர் | 05.06.2026 | 15 பயனாளிகள்

உலக சுற்றுச்சூழல் தினமான 05.06.2026 அன்று கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஸ்ரீ சத்ய சாய் பிரேம தரு திட்டத்தின் கீழ் பல்வேறு சமிதிகள் மரக்கன்று நடும் மற்றும் வழங்கும் நிகழ்ச்சிகளைச் சிறப்பாக நடத்தின. சூலூர் ஸ்ரீ சத்ய சாய் சேவா சமிதி சார்பில் மூன்று வெவ்வேறு இடங்களில் மொத்தம் 540 மரக்கன்றுகள் நடப்பட்டு சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

வடவள்ளி ஸ்ரீ சத்ய சாய் சேவா சமிதி சார்பில் பி.எஸ்.ஜி பள்ளி மாணவர்களுக்கு 150 மரக்கன்றுகள் வழங்கப்பட்டு, மாணவர்களிடையே மரம் வளர்ப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. மேலும், பயனியர் மில் தெரு ஸ்ரீ சத்ய சாய் பஜனா மண்டலி சார்பில் செல்வபுரம் மாநகராட்சி மகளிர் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் 5 மரக்கன்றுகள் நடப்பட்டன.

இந்நிகழ்வில் சுமார் 15 சேவாதளத்தொண்டர்கள் பங்கேற்று உற்சாகமாகச் சேவையாற்றினர். இந்நிகழ்ச்சிகள் அனைத்தும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு, பசுமை வளர்ச்சி மற்றும் வருங்கால தலைமுறைக்கு ஆரோக்கியமான இயற்கைச் சூழலை உருவாக்கும் உயரிய நோக்கத்துடன், பகவானின் அருளாசியால் சிறப்பாக நடைபெற்றன.


GPS Map Camera
Check In
Coimbatore, Tamil Nadu, India
Xwqw+v9c, Kurinji Garden, Selvapuram South,
Coimbatore, Tamil Nadu 641001, India


GPS Map Camera
Check In
Coimbatore, Tamil Nadu, India
Xwqw+v9c, Kurinji Garden, Selvapuram South,
Coimbatore, Tamil Nadu 641001, India

# மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்ச்சி

கோயம்புத்தூர் | 12,29.06.2026 | 88 பயனாளிகள்

சுவாமியின் பெருங்கருணையால் கோயம்புத்தூர் மாவட்டம் ஆர்.எஸ். புரம் சமிதியின் சார்பாக 12.06.2026 அன்று ஸ்ரீ சத்ய சாய் பிரேம தரு திட்டத்தின் கீழ் மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. தத்தெடுக்கப்பட்ட கிராமமான குப்பனூரில் உள்ள அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 120 மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. இதன் மூலம் மாணவர்களிடையே மரம் வளர்ப்பதன் அவசியம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இதில் பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் சமிதி உறுப்பினர்கள் என 30-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

மேலும், ஜூன் 29 அன்று கோவைப்புதூர் பகுதியில் உள்ள பள்ளிகளில் மாணவர்களுக்குப் பழமரக் கன்றுகள் வழங்கும் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. காலை 9.00 மணிக்கு கோவைப்புதூர் வி.எல்.பி. உயர்நிலைப் பள்ளியில் பள்ளி நிர்வாகம், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் சாய் பக்தர்கள் முன்னிலையில் இந்நிகழ்ச்சி தொடங்கியது. சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை மாணவர்களிடையே ஏற்படுத்தும் நோக்கில் இது நடத்தப்பட்டது.

மொத்தம் 400 பழமரக் கன்றுகள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. வி.எல்.பி. உயர்நிலைப் பள்ளிக்கு 150, சி.பி.எம். உயர்நிலைப் பள்ளிக்கு 150 மற்றும் குருகுலம் உயர்நிலைப் பள்ளிக்கு 100 மரக்கன்றுகள் என வழங்கப்பட்டன. மாணவர்கள் அவற்றை நட்டு வளர்த்துப் பாதுகாப்பதன் மூலம் இயற்கைக்குச் சேவை செய்யுமாறு ஊக்குவிக்கப்பட்டனர். மேலும், சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டும் என்ற பகவானின் தெய்வீகப் போதனைகள் மாணவர்களிடம் எடுத்துரைக்கப்பட்டன.

இதில் கோவைப்புதூர், குனியமுத்தூர், பீளமேடு மற்றும் ஆர்.எஸ். புரம் சமிதிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் 8 பேரும், பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் என 50-க்கும் மேற்பட்டோரும் ஆர்வமுடன் பங்கேற்று இச்சேவை நிகழ்ச்சியைச் சிறப்பாக நடத்தினார்கள்.





# புதிய பாலவிகாஸ் மையம்

கோயம்புத்தூர் 14.06.2026

சுவாமியின் பெருங்கருணையால் கோயம்புத்தூர் மாவட்டம் கணபதி ஸ்ரீ சத்ய சாய் சேவா சமிதியின் சார்பாக 14.06.2026 அன்று கே.ஆர்.ஜி. நகரில் புதிய பாலவிகாஸ் மையம் தொடங்கப்பட்டது. இப்புதிய மையத்தில் பத்து மாணவர்கள் சேர்ந்துள்ளனர்.



# சர்வதேச யோகா தின அனுசரிப்பு

**கோயம்புத்தூர்** **21.06.2026** **30 பயனாளிகள்**

சுவாமியின் பெருங்கருணை மற்றும் அருளாசியுடன், 21.06.2026 அன்று சர்வதேச யோகா தினம் கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஆன்மீக உணர்வுடனும் உற்சாகத்துடனும் அனுசரிக்கப்பட்டது. இதன் ஒரு பகுதியாக, கோயம்புத்தூர் ரேஸ் கோர்ஸ் ஸ்ரீ சத்ய சாய் மந்திரில், புட்டபர்த்தி ஸ்ரீ சத்ய சாய் பொது மருத்துவமனையின் முன்னாள் யோகா சிகிச்சையாளர் டாக்டர் எஸ். ஹேமா (M.B.B.S., D.Y.T.) அன்றாட வாழ்வில் யோகாவின் அவசியம் மற்றும் உடல், மனம், ஆன்மா ஆகியவற்றின் ஒருங்கிணைந்த ஆரோக்கியம் குறித்துச் சிறப்புரையாற்றினார்.

தொடர்ந்து எளிய யோகாசனங்கள் மற்றும் சுவாசப் பயிற்சிகள் அடங்கிய செய்முறைப் பயிற்சியும் நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பாலவிகாஸ் குரூப்-3 மாணவர்கள், பெற்றோர்கள், பாலவிகாஸ் குருமார்கள் மற்றும் பக்தர்கள் என மொத்தம் சுமார் 30 பேர் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

மேலும், போத்தனூர், கோவைப்புதூர், பொள்ளாச்சி மற்றும் சாய்பாபா காலனி (அங்கப்பா பள்ளி) ஆகிய ஸ்ரீ சத்ய சாய் சேவா சமிதிகளும் தங்கள் பகுதிகளில் எளிய யோகாசனங்கள், மூச்சுப்பயிற்சிகள் மற்றும் யோகாவின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகளைப்

பள்ளி மாணவர்களுக்கும் பெரியவர்களுக்கும் நடத்தி, ஆரோக்கியமான வாழ்வியலை மக்களிடையே ஊக்குவித்தன.

“உடல் என்பது இறைவன் உறையும் ஆலயம்; அதனை ஆரோக்கியமாகப் பேணுவது ஒவ்வொருவரின் கடமை” என்ற பகவானின் தெய்வீக வழிகாட்டுதலை நடைமுறைப்படுத்தும் வகையில், சர்வதேச யோகா தின நிகழ்ச்சிகள் கோயம்புத்தூர் மாவட்டத்தில் சிறப்பாக நடைபெற்றன.





# பாலவிகாஸ் மாணவர்களுக்கான பேரிடர் மேலாண்மை விழிப்புணர்வு நிகழ்ச்சி

கோயம்புத்தூர் | 21.06.2026 | 30 பயனாளிகள்

சுவாமியின் பெருங்கருணையால் 21.06.2026 அன்று பாலவிகாஸ் குரூப்-3 மாணவர்களுக்கான பேரிடர் மேலாண்மை விழிப்புணர்வு நிகழ்ச்சி கோயம்புத்தூர் ரேஸ் கோர்ஸ் ஸ்ரீ சத்ய சாய் மந்திர் வளாகத்தில் நடைபெற்றது. பகவானின் "மனித சேவையே மாதவ சேவை" என்ற தெய்வீகப் போதனையை அடிப்படையாகக் கொண்டு, சமூகத்திற்குத் தன்னலமற்ற சேவை செய்யும் மனப்பான்மையையும், அவசரகாலங்களில் தன்னையும் பிறரையும் பாதுகாக்கும் விழிப்புணர்வையும் மாணவர்களிடையே உருவாக்கும் நோக்கத்துடன் இந்நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியை ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவனங்களின் கோயம்புத்தூர் மாவட்ட பேரிடர் மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் சிறப்பாக நடத்தினர். இயற்கை மற்றும் மனிதனால் ஏற்படும் பேரிடர்களின் போது கடைப்பிடிக்க வேண்டிய பாதுகாப்பு வழிமுறைகள், முதலுதவி பற்றிய அடிப்படை அறிவு, அவசரநிலைகளில் தன்னம்பிக்கையுடன் செயல்பட வேண்டிய நடைமுறைகள் மற்றும் சேவை மனப்பான்மையின் அவசியம் குறித்து விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டது.

இதில் பாலவிகாஸ் குரூப்-3 மாணவர்கள், பெற்றோர்கள், பாலவிகாஸ் குருமார்கள் மற்றும் பக்தர்கள் என மொத்தம் சுமார் 30 பேர் கலந்து கொண்டு பயனடைந்தனர். இந்நிகழ்ச்சி, இளம் தலைமுறையினரிடம் பேரிடர் கால முன்னெச்சரிக்கை விழிப்புணர்வையும், தன்னம்பிக்கையையும், சமூகப் பொறுப்புணர்வையும் வளர்க்கும் சிறந்த முயற்சியாகப் பகவானின் அருளாசியால் வெற்றிகரமாக நடைபெற்றது.





# ஸ்வாமியின் மாதாந்திர ஆராதனை தின அனுசரிப்பு

**கோயம்புத்தூர்** **24.06.2026**

சுவாமியின் பெருங்கருணையால் சுவாமியின் மாதாந்திர ஆராதனை தின அனுசரிப்பு 24.06.2026 அன்று கோயம்புத்தூர் மாவட்டம் ஸ்ரீ சத்ய சாய் மந்திரில் ஆன்மீக எழுச்சியுடனும் பக்திப் பரவசத்துடனும் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பக்தர்கள் அனைவரும் இணைந்து வேத பாராயணம், ஸ்ரீ சத்ய சாய் லட்சார்ச்சனை மற்றும் ஸ்ரீ சத்ய சாய் பஞ்சரத்ன கீர்த்தனைகள் ஆகியவற்றை பக்திபூர்வமாகச் சமர்ப்பித்து, பகவானின் தெய்வீக அருளைப் பெறும் பாக்கியத்தைப் பெற்றனர்.

அதனைத் தொடர்ந்து நாராயண சேவை நடைபெற்றது. அன்புடனும் பணிவுடனும் உணவுப் பிரசாதம் வழங்கப்பட்டு, “மானவ சேவையே மாதவ சேவை” என்ற பகவானின் தெய்வீகப் போதனை நடைமுறையில் செயல்படுத்தப்பட்டது. ஆன்மீகச் சாதனையையும் தன்னலமற்ற சேவையையும் ஒருங்கிணைத்த இந்நிகழ்ச்சி, பக்தர்களிடையே பக்தி, ஒற்றுமை மற்றும் சேவை மனப்பான்மையை மேலும் வலுப்படுத்தும் வகையில் பகவானின் அருளாசியால் சிறப்பாக நடைபெற்றது.

# பாலவிகாஸ் குரூப்-I குருமார்களுக்கான பயிற்சி முகாம்

கோயம்புத்தூர் | 28.06.2026 | 85 பயனாளிகள்

சுவாமியின் பரிபூரண அருளாலும் ஆசியாலும், 28.06.2026 அன்று கோயம்புத்தூர் ரேஸ் கோர்ஸ் ஸ்ரீ சத்ய சாய் மந்திர் வளாகத்தில் பாலவிகாஸ் குரூப்-1 குருமார்களுக்கான ஒருநாள் பயிற்சி முகாம் சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்ச்சி கொடியேற்றத்துடன் தொடங்கி, வேத பாராயணம், பஜனை, மூத்த பாலவிகாஸ் குருமார்களால் குத்துவிளக்கு ஏற்றுதல் ஆகியவற்றைத் தொடர்ந்து, மாவட்ட கல்வி ஒருங்கிணைப்பாளர் வரவேற்புரை வழங்கினார். பின்னர், மாவட்டத் தலைவர் திரு. டி. எஸ். வெங்கடேச நாராயணன் அவர்களின் சிறப்புரை குருமார்களுக்கு ஊக்கமும் வழிகாட்டுதலும் அளிப்பதாக அமைந்தது.

அதனைத் தொடர்ந்து, பாலவிகாஸ் குரூப்-1 பாடத்திட்டத்தில் இடம்பெற்றுள்ள அனைத்துத் தலைப்புகளும் மாவட்டத்தின் அனுபவமிக்க வளமையாளர்களால் குழு செயல்பாடுகள், கலந்துரையாடல்கள் மற்றும் பயிற்சி அமர்வுகள் மூலம் விரிவாக எடுத்துரைக்கப்பட்டன. பங்கேற்ற குருமார்கள் மிகுந்த ஆர்வத்துடனும் ஈடுபாட்டுடனும் பயிற்சியில் கலந்து

கொண்டு, பயனுள்ள குறிப்புகளைப் பதிவு செய்து தங்களது கற்பித்தல் திறனை மேம்படுத்திக் கொண்டனர்.

பயிற்சியின் நிறைவில், பங்கேற்ற அனைத்து குருமார்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. தொடர்ந்து மங்கள ஆரத்தி மற்றும் பகவானின் திவ்ய தரிசனத்துடன் பயிற்சி முகாம் இனிதே நிறைவுற்றது. இப்பயிற்சி முகாமில் 21 புதிய பாலவிகாஸ் குருமார்கள், 39 பாலவிகாஸ் மாணவர்கள், 15 பெற்றோர்கள் மற்றும் 10 சமிதி பொறுப்பாளர்கள் உட்பட 85-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பகவானின் அருளையும் ஆசியையும் பெற்றனர்.

புதிய பாலவிகாஸ் குருமார்களை உருவாக்கி, மதிப்புக் கல்வியின் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் நடைபெற்ற இப்பயிற்சி முகாம், கோயம்புத்தூர் மாவட்டத்தின் கல்விப் பிரிவு செயல்பாடுகளில் குறிப்பிடத்தக்க மற்றும் பயனுள்ள நிகழ்வாக அமைந்தது.

# இலவச மருத்துவ ஆலோசனை முகாம்கள்

**கோயம்புத்தூர்**

**607 பயனாளிகள்** **202 சேவாதளத்தொண்டர்கள்**

சுவாமியின் பரிபூரண அருளாலும் ஆசியாலும், ஜூன் 2026 மாதத்தில் கோயம்புத்தூர் மாவட்டம் முழுவதும் 13 இலவச வாராந்திர மற்றும் மாதாந்திர மருத்துவ முகாம்கள் வெற்றிகரமாக நடத்தப்பட்டன.

இம்மருத்துவ முகாம்கள் ரேஸ் கோர்ஸ் ஸ்ரீ சத்ய சாய் மந்திர் வளாகத்தில் இரண்டும், தொட்டிபாளையம், வரப்பாளையம், குப்பநாயக்கன்பாளையம், அஞ்சுகம் நகர், குனியமுத்தூர், குப்பனூர் மற்றும் செல்லப்பகவுண்டன்புதூர் ஆகிய கிராமங்களில் தலா ஒன்றும், மேலும் பொள்ளாச்சியில் நான்கு வாராந்திர மருத்துவ முகாம்களும் நடைபெற்றன.

இம்முகாம்களின் மூலம் பொதுமக்களுக்கு இலவச மருத்துவப் பரிசோதனை, மருத்துவ ஆலோசனை மற்றும் தேவையான மருந்துகள் வழங்கப்பட்டன. ஏழை, எளிய மக்களுக்குத் தரமான மருத்துவ சேவையை அவர்களது இருப்பிடத்திலேயே கொண்டு சேர்க்கும் பகவானின் சேவைத் தத்துவம் இதன் மூலம் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்பட்டது.

இச்சேவைப் பணிகளில் தன்னார்வ மருத்துவர்கள், துணை மருத்துவப் பணியாளர்கள், சமிதி பொறுப்பாளர்கள் மற்றும்

சேவாதளத்தொண்டர்கள் முழு அர்ப்பணிப்பு உணர்வுடன் இணைந்து பணியாற்றினர். மொத்தம் 202 தன்னார்வலர்கள் சேவையாற்றி, 607 பயனாளிகள் இந்த இலவச மருத்துவ சேவையின் மூலம் பயனடைந்தனர்.

# பாலவிகாஸ் மாணவனுக்குப் பாராட்டு

தேனி 11.06.2026
1 பயனாளிகள் 2 சேவாதளத்தொண்டர்கள்

நமது பகவானின் பேரருளால் தேனி மாவட்டம் கே.கே. பட்டி சேவா சமிதி பாலவிகாஸ் மாணவன் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் பள்ளியில் முதலிடம் பெற்றார். இதைப் பாராட்டும் விதமாக 11.06.2026 அன்று அவருக்கு வஸ்திரம் வழங்கப்பட்டது.

# இலவச கண் பரிசோதனை முகாம்

கன்னியாகுமரி | 07.06.2026 | 237 பயனாளிகள் | 29 சேவாதளத்தொண்டர்கள்

கன்னியாகுமரி மாவட்ட ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவனங்கள் சார்பில் 07.06.2026 அன்று வடசேரி எஸ்.எம்.ஆர்.வி. (S.M.R.V) மேல்நிலைப் பள்ளியில் இலவசக் கண் பரிசோதனை முகாம் நடைபெற்றது. திருநெல்வேலி அரவிந்த் கண் மருத்துவமனையுடன் இணைந்து நடத்தப்பட்ட இம்முகாமில் 237 பயனாளிகள் கலந்து கொண்டு கண் பரிசோதனைகளைச் செய்து கொண்டனர்.

அவர்களில் கண்புரை அறுவை சிகிச்சைக்குத் தகுதியான 102 நபர்கள் தேர்வு செய்யப்பட்டு, அன்றைய தினமே மேல் சிகிச்சைக்காகத் திருநெல்வேலிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். முகாமிற்கு வருகை தந்த பயனாளிகள் அனைவருக்கும் நாராயண சேவை வழங்கப்பட்டது.

இப்பணியில் 29 சேவாதளத்தொண்டர்கள் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு சேவை புரிந்தனர். மதியம் 2.30 மணியளவில் மங்கள ஆரத்தியுடன் இச்சேவை முகாம் இனிதே நிறைவுற்றது.


NOTICE BOARD
DIES
OILET



# சாயி புரதச் சத்து மாவு வழங்கும் சேவை

கன்னியாகுமரி | 11.06.2026 | 70 பயனாளிகள் | 6 சேவாதளத்தொண்டர்கள்

கன்னியாகுமரி மாவட்ட ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவனங்கள் சார்பில் தேரூர் கஸ்தூரிபாய் நடுநிலைப் பள்ளியில் பயிலும் குழந்தைகளுக்கு ஒவ்வொரு மாதமும் ஸ்ரீ சத்ய சாய் புரதச் சத்து மாவு வழங்குவது வழக்கம்.

இம்முறை 11.06.2026 அன்று குலசேகரன்புதூர் சமிதி மகிளா அன்பர்களால் கவனத்துடன் தயாரிக்கப்பட்ட புரதச் சத்து மாவு, பள்ளி நிர்வாகத்திடம் முறையாக ஒப்படைக்கப்பட்டது. இந்தப் புரதச் சத்து மாவை ஆசிரியர்கள் தினமும் குழந்தைகளுக்கு நண்பகல் உணவாகச் சமைத்துக் கொடுக்கின்றனர்.



# இலவசக் கண் மருத்துவ முகாம்

**காஞ்சிபுரம் தெற்கு**

**70 பயனாளிகள்** **10 சேவாதளத்தொண்டர்கள்**

செங்கல்பட்டு சமிதி மற்றும் பம்மல் சங்கரா கண் மருத்துவமனை இணைந்து நடத்திய இலவசக் கண் மருத்துவ முகாம் 28.06.2026 அன்று செங்கல்பட்டு சமிதி வளாகத்தில் நடைபெற்றது. இம்முகாமில் 19 பயனாளிகள் கலந்து கொண்டு கண் பரிசோதனை செய்து கொண்டனர். அவர்களில் கண்புரை அறுவை சிகிச்சைக்குத் தகுதியான 14 நபர்கள் கண்டறியப்பட்டு மேல் சிகிச்சைக்காகத் தேர்வு செய்யப்பட்டனர்.

இப்பணியில் 7 சேவாதளத்தொண்டர்கள் முகாமிற்கான ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்தனர். மேலும், முகாமிற்கு வருகை தந்த பயனாளிகள் மற்றும் பணியாளர்கள் என மொத்தம் 45 நபர்களுக்கு நாராயண சேவை வழங்கப்பட்டது. 7 குடும்பங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஒன்றிணைந்து இச்சேவையினை மேற்கொண்டனர்.

அதேபோல், பார்வதி நகர் சமிதியின் சார்பாக 07.06.2026 அன்று வஞ்சுவாஞ்சேரி கிராமத்தில் பம்மல் சங்கரா கண் மருத்துவமனையின் மூலமாக இலவசக் கண் சிகிச்சை முகாம் நடைபெற்றது. இம்முகாமில் 35 பயனாளிகள்

கலந்து கொண்டு கண் பரிசோதனை செய்து கொண்டனர். அவர்களில் கண்புரை அறுவை சிகிச்சைக்குத் தகுதியான 3 நபர்கள் கண்டறியப்பட்டு மேல் சிகிச்சைக்காகத் தேர்வு செய்யப்பட்டனர்.






## சாதனா முகாம்

காஞ்சிபுரம் தெற்கு

07.06.2026 18 சேவாதளத்தொண்டர்கள்

கூடுவாஞ்சேரி சமிதியின் சார்பாக 07.06.2026 அன்று சமிதி வளாகத்தில் சாதனா முகாம் நடைபெற்றது.

இதில் சமிதியின் பாலவிகாஸ் மாணவச் செல்வங்கள் திரளாகப் பங்கேற்றுப் பகவானுக்குத் தொண்டாற்றினர்.

## சாயி புரதச்சத்து மாவு வழங்கும் சேவை

காஞ்சிபுரம் தெற்கு

160 பயனாளிகள்

4 சேவாதளத்தொண்டர்கள்

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் சமிதிகள் இணைந்து, மக்களின் உடல் நலனை மேம்படுத்தும் நோக்கில் ‘சாயி புரதச்சத்து மாவு’ விநியோகச் சேவையைத் தொடர்ந்து நடத்தி வருகின்றன.

தாம்பரம் சமிதியின் சார்பாக குரோம்பேட்டை அரசு மருத்துவமனையில் உள்ள சுமார் 125 கர்ப்பிணிப் பெண்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் சாயி புரதச்சத்து மாவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன. மேலும் 5 பொட்டலங்கள் சங்கரா முதியோர் இல்லத்திற்கு வழங்கப்பட்டன.

ஸ்ரீபெரும்புதூர் சமிதியின் சார்பாக 16.06.2026 அன்று ஸ்ரீபெரும்புதூர், தயானந்த சரஸ்வதி கிருபா இல்லத்திற்கு 30 கிலோ சாயி புரதச்சத்து மாவு வழங்கப்பட்டது.

# இணையவழி சாயி காயத்ரி ஜபம்

## காஞ்சிபுரம் தெற்கு

தாம்பரம் சமிதியின் அங்கத்தினர்கள் தினமும் இரவு 9 மணியளவில் இணையதள சந்திப்பின் வாயிலாக, உலக அமைதி வேண்டி சாயி காயத்ரி ஜெபத்தை மேற்கொள்கின்றனர்.

இதில் தினமும் 15 அங்கத்தினர்கள் தவறாது கலந்து கொண்டு, பகவானின் அருளைப் பெறுகின்றனர்.

# இல்லத்திலும் உள்ளத்திலும் சாயி நாமம்

காஞ்சிபுரம் தெற்கு | 100 சேவாதளத்தொண்டர்கள்

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் சமிதிகள் 'இல்லத்திலும் உள்ளத்திலும் சாயி நாமம்' என்ற திட்டத்தின் கீழ், அன்பர்களின் இல்லங்கள் மற்றும் பொது இடங்களில் வேத பாராயணம் மற்றும் பஜனை நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து நடத்தி வருகின்றன. இதன் மூலம் ஆன்மீக அதிர்வுகள் பலரின் இல்லங்களைச் சென்றடைகின்றன.

இதன் ஒரு பகுதியாக, தாம்பரம் சமிதி சார்பில் மாதத்தின் அனைத்துச் சனிக்கிழமைகளிலும் உறுப்பினர்களின் இல்லங்களில் ஸ்ரீ ருத்ர பாராயணமும், அதனைத் தொடர்ந்து பஜனையும் நடைபெறுகின்றன.

இதுவரை மொத்தம் 150 இடங்களில் இந்நிகழ்வுகள் பக்திபூர்வமாக நடத்தப்பட்டுள்ளன. இதில் சுமார் 100 அன்பர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.





# சிறப்பு நாராயண சேவை

காஞ்சிபுரம் தெற்கு

132 பயனாளிகள்

13 சேவாதளத்தொண்டர்கள்

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் சமிதிகள் சார்பில் மாதந்தோறும் நாராயண சேவை பக்திபூர்வமாக நடைபெற்று வருகிறது. இதன் ஒரு பகுதியாக, 07.06.2026 அன்று கூடுவாஞ்சேரி சமிதி மற்றும் காயரம்பேடு பஜனை மண்டலி இணைந்து சுமார் 132 நபர்களுக்கு நாராயண சேவை வழங்கின.

இப்பணியில் சாய் அன்பர்கள் மற்றும் பாலவிகாஸ் மாணவர்கள் ஒன்றிணைந்து உணவைத் தயாரித்துத் தங்களின் அன்பான சேவையினை வழங்கினர். பகவானின் அருளால் இந்த நாராயண சேவை இனிதே நிறைவுற்றது.





# அமிர்த கலச விநியோக சேவை

காஞ்சிபுரம் தெற்கு | 1 பயனாளிகள்

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் சமிதிகள் சார்பில் மாதந்தோறும் அமிர்த கலச விநியோக சேவை பக்திபூர்வமாக நடைபெற்று வருகிறது. இதன் ஒரு பகுதியாக, 01.06.2026 அன்று ஸ்ரீபெரும்புதூர் சமிதியின் சார்பாக, சமிதியின் தத்து கிராமத்தில் வசிக்கும் ஒரு குடும்பத்திற்கு அமிர்த கலசம் வழங்கப்பட்டது.



# நடமாடும் பொது மருத்துவ முகாம் மற்றும் கண் மருத்துவ முகாம்

**காஞ்சிபுரம் தெற்கு** **268 பயனாளிகள்**

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தின் சார்பில் பொதுமக்களுக்குப் பயனளிக்கும் வகையில் மாதந்தோறும் இரண்டு இடங்களில் நடமாடும் மருத்துவ முகாம்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

ஜூன் 21, 2026 (மூன்றாம் ஞாயிற்றுக்கிழமை) அன்று தாம்பரம் சமிதியின் தத்து கிராமமான ஆரம்பாக்கத்தில் உள்ள சாயி தோட்டத்தில் முதல் முகாம் நடைபெற்றது. முகாம் இயக்குனர் மருத்துவர் நாகராஜு அவர்களின் தலைமையின் கீழ், மருத்துவர்கள் ஜெயசீலன், ஐஸ்வர்யா மற்றும் கிருத்திகா மோகன் ஆகியோர் மருத்துவப் பரிசோதனைகள் செய்து, ஒரு மாதத்திற்குத் தேவையான மருந்து மாத்திரைகளை இலவசமாக வழங்கினர்.

இம்முகாமில் 90 பயனாளிகள் கலந்து கொண்டனர். 105 பேருக்கு ஆய்வகப் பரிசோதனைகளும், 3 பேருக்கு எக்ஸ்-ரேவும் எடுக்கப்பட்டன. 6 பேருக்கு யோகா பயிற்சி அளிக்கப்பட்டது. கண்பரிசோதனை செய்துகொண்ட 20 பேரில் (11 ஆண்கள், 9 பெண்கள்) 2 நபர்கள் கண்புரை அறுவை சிகிச்சைக்காகப் பம்மல் சங்கரா கண் மருத்துவமனைக்கு

அழைத்துச் செல்லப்பட்டனர். 12 பேருக்கு இலவசக் கண் கண்ணாடிகளும், மருத்துவர் பரிந்துரைப்படி 50 பேருக்குச் சாயி புரதச்சத்து மாவுப் பொட்டலங்களும் வழங்கப்பட்டன. மேலும், 5 நபர்கள் மேல் சிகிச்சைக்காகச் சென்னை ராகா மருத்துவமனைக்குப் பரிந்துரைக்கப்பட்டனர்.

அதேபோல், ஜூன் 28, 2026 (நான்காம் ஞாயிற்றுக்கிழமை) அன்று மண்ணிவாக்கம் சமிதி வளாகத்தில் இரண்டாவது மருத்துவ முகாம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. முகாம் இயக்குனர் மருத்துவர் நாகராஜு தலைமையில், மருத்துவர்கள் பிரசாந்தி, மாலா, சுபா ஹரிஷ், அனுராதா மற்றும் மனிஷா ஆகியோர் சேவை புரிந்தனர்.

இம்முகாமில் 178 பயனாளிகள் (70 ஆண்கள், 108 பெண்கள்) கலந்து கொண்டனர். 156 பேருக்கு ஆய்வகப் பரிசோதனைகளும், 8 பேருக்கு எக்ஸ்-ரேவும், 5 பேருக்கு இ.சி.ஜியும் எடுக்கப்பட்டன. 5 பேருக்கு யோகா பயிற்சி அளிக்கப்பட்டது. கண்பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 43 பேரில் 8 பேர் (3 ஆண்கள், 5 பெண்கள்) கண்புரை அறுவை சிகிச்சைக்காகப் பம்மல் சங்கரா கண் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். 10 பேருக்கு இலவசக் கண் கண்ணாடிகளும், மருத்துவர்களின் பரிந்துரையின் பேரில் 50 பேருக்குச் சாயி புரதச்சத்து மாவுப் பொட்டலங்களும் வழங்கப்பட்டன.

இவ்விரு முகாம்களையும் தாம்பரம் மற்றும் மண்ணிவாக்கம் சமிதியினர் மற்றும் சேவாதளத் தொண்டர்கள் மிகவும் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். முகாமிற்கு வருகை தந்த

அனைவருக்கும் நாராயண சேவையாக காலைச் சிற்றுண்டி, தேநீர் மற்றும் மதிய உணவு வழங்கப்பட்டன. பகவானுக்கு மகா மங்கள ஆரத்தி சமர்ப்பிக்கப்பட்டு மருத்துவ முகாம்கள் இனிதே நிறைவடைந்தன.



# சிறப்பு நகர சங்கீர்த்தனம்

திண்டுக்கல்

28.06.2026 | 17 சேவாதளத்தொண்டர்கள்

28.06.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 5.20 மணி முதல் 6.35 மணி வரை மகாலட்சுமி நகர் சமிதியில் சிறப்பு நகர சங்கீர்த்தனம் பக்திபூர்வமாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் 9 ஆண்கள் மற்றும் 8 மகிளாக்கள் என மொத்தம் 17 பேர் கலந்து கொண்டு பகவானின் நாம சங்கீர்த்தனத்தில் ஈடுபட்டுப் பயனடைந்தனர்.

## மாவட்ட அளவிலான சாதனா முகாம்

திண்டுக்கல்

26.06.2026 | 49 சேவாதளத்தொண்டர்கள்

26.06.2026 வெள்ளிக்கிழமை அன்று திண்டுக்கல் மாவட்டம், சாணார்பட்டி ஊராட்சிக்கு உட்பட்ட எஸ். மேட்டுப்பட்டியில் அமைந்துள்ள கதிர் நரசிம்ம பெருமாள் (பேசும் பெருமாள்) கோவிலில் காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை மாவட்ட அளவிலான சாதனா முகாம் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் பஜனை, சத்சங்கம் மற்றும் கோவில் தூய்மைப் பணி ஆகிய சேவைகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், கோவில் நிர்வாகத்தினர் கோவிலின் தலவரலாறு, பழமையான பலிபீடத்தின் சிறப்பு, கொடிமரம் மற்றும் அர்த்தமண்டபம் உள்ளிட்ட ஆன்மீக மற்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க தகவல்களை விளக்கமாக எடுத்துரைத்தனர்.

இதில் 13 ஆண்கள், 18 மகிளாக்கள், 10 பாலவிகாஸ் குழந்தைகள் மற்றும் 8 பக்தர்கள் என மொத்தம் 49 பேர் கலந்து கொண்டு பயனடைந்தனர். இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மாவட்டத் தலைவர் மற்றும் மாவட்ட சேவை ஒருங்கிணைப்பாளர் ஆகியோர் சிறப்பாகச் செய்திருந்தனர்.





# ஸ்ரீ பாலமுருகன் கோவில் சிறப்பு பஜன்

திண்டுக்கல்

10.06.2026

35 சேவாதளத்தொண்டர்கள்

10.06.2026 அன்று கார்த்திகையை முன்னிட்டு, கோவிந்தாபுரம் பாலமுருகன் கோவிலில் மாலை 5.45 மணி முதல் 6.45 மணி வரை சிறப்பு பஜனை பக்திபூர்வமாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் 10 ஆண்கள், 15 மகிளாக்கள் மற்றும் 10 பக்தர்கள் என மொத்தம் 35 பேர் கலந்து கொண்டு பயனடைந்தனர்.



# பாலவிகாஸ் குழந்தைகள் வழங்கிய நாராயண சேவை

திண்டுக்கல் 14.06.2026 16 பயனாளிகள்

கடந்த 14.06.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று, திண்டுக்கல் போக்குவரத்து நகர் பாலவிகாஸ் குழந்தைகள் தங்கள் வீடுகளில் தயார் செய்த உணவைக் கொண்டு வந்து சுவாமியிடம் அர்ப்பணம் செய்து, சின்னாளப்பட்டி பகுதிகளில் நாராயண சேவை செய்தனர்.

இந்நிகழ்ச்சியின் மூலம் பாலவிகாஸ் மாணவர்களுக்கு நாராயண சேவையின் முக்கியத்துவம், அதனால் ஏற்படும் மனநிறைவு மற்றும் சேவையின் மகத்துவம் ஆகியவற்றை நேரில் உணர்ந்து அறியும் அரிய வாய்ப்புக் கிடைத்தது.



# சர்வ தேச யோகா தினம்

திண்டுக்கல் 21.06.2026
60 பயனாளிகள் 69 சேவாதளத்தொண்டர்கள்

கடந்த 21.06.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று, திண்டுக்கல் மாவட்ட அளவில் 5 பாலவிகாஸ் மையங்களில் யோகா தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. குழந்தைகள் பல விதமான யோகாசனங்களைச் செய்தனர். இதில் குழந்தைகள், குருமார்கள் மற்றும் பெற்றோர்கள் என மொத்தம் 60 பேர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியின் மூலம் யோகா செய்வதால் ஏற்படும் நன்மைகள், உடல் மற்றும் மன ரீதியாக ஏற்படும் நல்ல மாற்றங்கள், அதனால் கிடைக்கும் பலன்கள் போன்ற எண்ணற்ற விஷயங்களைப் பாலவிகாஸ் மாணவர்கள் அறிந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது.





# திருக்கோவில் உழவாரப்பணி

திண்டுக்கல்

10.06.2026 | 8 சேவாதளத்தொண்டர்கள்

10.06.2026 புதன்கிழமை அன்று காலை 10.35 மணி முதல் மதியம் 1.00 மணி வரை கோவிந்தாபுரத்தில் அமைந்துள்ள பாலமுருகன் கோவிலில் உழவாரப் பணி சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் 3 ஆண்கள் மற்றும் 5 மகிளாக்கள் கலந்து கொண்டு சேவை செய்தனர்.





# பிரேம ரத யாத்திரை (சுந்தரம் பிரேம ரதம் மற்றும் பிரசாந்தி நிலைய பிரேம ரதம்)

**திருவண்ணாமலை** **02.06-01.07.2026**

பகவான் ஸ்ரீ சத்ய சாய்பாபா அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, சுந்தரம் மற்றும் பிரசாந்தி நிலையத்திலிருந்து வந்த இரண்டு பிரேம ரதங்களும் திருவண்ணாமலை மாவட்டம் முழுவதும் வீதி உலா மேற்கொண்டு, பக்தர்களுக்கும் பொதுமக்களுக்கும் பகவானின் திவ்ய தரிசனத்தை வழங்கின.

ஆரணி, படவேடு, சந்தவாசல், நடுக்குப்பம், தேவானந்தல், வைப்பூர் மற்றும் திருவண்ணாமலை உள்ளிட்ட பகுதிகளில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிகளில் ஓங்காரம், வேத பாராயணம், ரத பூஜை, பூரண கும்ப வரவேற்பு, பள்ளி மாணவர்களின் சாய் காயத்ரி, திருவாசக பாராயணம், பஜனை, நாராயண சேவை மற்றும் பொதுமக்கள் தரிசனம் ஆகியவை நடைபெற்றன.

தேவானந்தல் மற்றும் வைப்பூர் போன்ற தத்தெடுக்கப்பட்ட கிராமங்களில் நாராயண சேவை மூலம் கிராம மக்களுக்கு உணவு வழங்கப்பட்டதுடன், பகவானின் அருளும் அனைவருக்கும் கிடைத்தது.

இரு பிரேம ரதங்களின் யாத்திரையும் பக்தி, சேவை, மனிதநேயம் மற்றும் ஆன்மீக ஒற்றுமையை மக்களிடையே

பரப்பிய சிறப்பான, மாவட்ட அளவிலான நிகழ்வாக அமைந்தது.





# பௌர்ணமி முன்னிட்டு ஸ்ரீ சத்யநாராயண பூஜை

திருவண்ணாமலை

29.06.2026 | 15 சேவாதளத்தொண்டர்கள்

பௌர்ணமியை முன்னிட்டு திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி சமிதியில் ஸ்ரீ சத்யநாராயண பூஜை பக்திபூர்வமாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் வேத மந்திரங்கள், பூஜை, பிரார்த்தனை மற்றும் ஆரத்தி ஆகியவை நடைபெற்றன. சாய் அன்பர்கள் பக்தியுடன் கலந்து கொண்டு பகவானின் அருளைப் பெற்றனர்.





# பாலவிகாஸ் வகுப்புகள் மீண்டும் தொடக்கம்

திருவண்ணாமலை

15.06.2026 | 23 சேவாதளத்தொண்டர்கள்

கோடை விடுமுறை நிறைவடைந்ததைத் தொடர்ந்து, திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி சமிதியில் பாலவிகாஸ் வகுப்புகள் மீண்டும் சிறப்பாகத் தொடங்கப்பட்டன.

நிகழ்ச்சி பிரார்த்தனையுடன் தொடங்கி, மாணவர்களுக்குச் சாய் கல்வி, நல்லொழுக்கம் மற்றும் மனிதநேய விழுமியங்கள் குறித்து வழிகாட்டுதல் வழங்கப்பட்டது.

தொடர்ந்து தினை லட்டு, பிஸ்கட், சாக்லேட் மற்றும் எலுமிச்சை சாதம் ஆகியவை பிரசாதமாக வழங்கப்பட்டன.





# இலவச கண்புரை அறுவை சிகிச்சை தேர்வு முகாம்

திருவண்ணாமலை | 07.06.2026 | 125 பயனாளிகள் | 8 சேவாதளத்தொண்டர்கள்

பகவான் ஸ்ரீ சத்ய சாய்பாபா அவர்களின் 100வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு, திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி சமிதியில் இலவச கண்புரை அறுவை சிகிச்சை தேர்வு முகாம்கள் நடத்தப்பட்டன.

இம்முகாம்களில் மொத்தம் 125 பேர் கண் பரிசோதனை செய்து கொண்டனர். அவர்களில் 24 ஆண்கள் மற்றும் 22 பெண்கள் என மொத்தம் 46 பேர் இலவச கண்புரை அறுவை சிகிச்சைக்காகத் தேர்வு செய்யப்பட்டுச் சென்னைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

முகாம்களின் போது மருத்துவப் பரிசோதனை, ஆலோசனை மற்றும் நோயாளிகளுக்கான வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டன. மேலும், முகாமில் கலந்து கொண்ட அனைவருக்கும் தேநீர், பிஸ்கட், மதிய உணவு மற்றும் குடிநீர் ஆகியவை வழங்கப்பட்டன.





# கிரிவலப் பாதையில் பிரேம ரத தரிசனம்

திருவண்ணாமலை 30.06.2026

பகவான் ஸ்ரீ சத்ய சாய்பாபா அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, 30.06.2026 அன்று திருவண்ணாமலை கிரிவலப் பாதையில் பகவானின் பிரேம ரதம் மூலம் கிரிவலப் பக்தர்களுக்கு திவ்ய தரிசனம் அளிக்கப்பட்டது.

மேலும், பக்தர்களுக்குப் பால், விபூதி மற்றும் பகவான் ஸ்ரீ சத்ய சாய்பாபா அவர்களின் திருவுருவப் படம் ஆகியவை பிரசாதமாக வழங்கப்பட்டன.

இந்நிகழ்வு பக்தர்களிடையே ஆன்மீக மகிழ்ச்சியையும் பகவானின் அருளையும் பரப்பிய சிறப்பான சேவை நிகழ்வாக அமைந்தது.



# பஜனை மற்றும் பாதபூஜை

ஈரோடு | 07.06.2026 | 16 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பெருங்கருணையால், 07.06.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று சித்தோடு சமிதியின் தத்து கிராமமான கொளத்துப்பாளையத்தில் மாலை 7.30 மணிக்கு பஜனை மற்றும் பாலவிகாஸ் குழந்தைகளின் பாதபூஜை நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன.

இந்நிகழ்ச்சியில் 12 குழந்தைகள் மற்றும் 4 இளைஞர்கள் கலந்து கொண்டு பாதபூஜை செய்தனர். நிறைவாக, நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.





# புதிய பள்ளி பாலவிகாஸ் வகுப்புகள் தொடக்கம்

ஈரோடு | 29.06.2026 | 175 பயனாளிகள்

இறைவன் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் பெருங்கருணையால், ஈரோடு மாவட்டம் கோபிச்செட்டிப்பாளையத்தில் உள்ள கம்பன் கல்வி நிலையம் பள்ளியில் ஸ்ரீ சத்ய சாயி பாலவிகாஸ் வகுப்புகள் ஜூன் 29 (திங்கட்கிழமை) அன்று தொடங்கப்பட்டன. 1 முதல் 5-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்காக இவ்வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன.

இதில் 6 குருமார்கள், 91 மாணவர்கள் மற்றும் 75 மாணவிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

இத்தகைய புனிதமான இறைப்பணியைச் செய்வதற்கான நல்வாய்ப்பினை அருளிய பகவானின் பாதாரவிந்தங்களில் குருமார்கள் தங்களின் நன்றிகலந்த வணக்கத்தைச் சமர்ப்பித்தனர்.


ALL IS WELL



# ஈரோடு மாவட்டம் ஆறாவது பவித்ர பர்த்தி யாத்திரா

ஈரோடு | 20,21.06.2026 | 900 பயனாளிகள்

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் நூறாவது பிறந்தநாளை முன்னிட்டு, ஈரோடு மாவட்ட சத்ய சாயி குடும்பத்தைச் சேர்ந்த சுமார் 900 பக்தர்கள் பவித்ர பர்த்தி யாத்திரையைச் சிறப்பாக மேற்கொண்டனர். இதில் மலைப்பகுதி கிராமங்களில் உள்ள 15 பாலவிகாஸ் மையங்களைச் சேர்ந்த பக்தர்களும் பங்கேற்றனர். இந்த 6-வது யாத்திரையின் போது, பயணம் முழுவதும் அனைத்து அன்பர்களுக்கும் காலை மற்றும் மதிய உணவு, தேநீர் மற்றும் சிற்றுண்டி ஆகியவை சுவாமியின் பிரசாதமாக மிகச் சிறப்பான முறையில் வழங்கப்பட்டன.

20.06.2026 சனிக்கிழமை அன்று முதல் நாள் காலை அமர்வு, ஆண்கள் வேத கோஷத்துடன் தொடங்கியது. அதனைத் தொடர்ந்து ஸ்ரீ சத்ய சாயி அஷ்டோத்திர பாராயணம், அர்ச்சனை, பஜனை மற்றும் மங்கள ஆரத்தியுடன் காலை நிகழ்வுகள் நிறைவடைந்தன.

அன்று மாலை நிகழ்வுகள் பெண்களின் வேத கோஷத்துடன் தொடங்கின. ஈரோடு மாவட்டத் தலைவர் திரு. வி.இ. அண்ணாமலை அவர்கள் ஈரோடு மாவட்டச் சேவைகள் குறித்துத் தொடக்க உரை ஆற்றினார். அதனைத் தொடர்ந்து

சுமார் 90 பாலவிகாஸ் குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் இணைந்து “சொல்லிய வண்ணம் செய்த சாய் பெருமான்” என்ற தலைப்பில் அழகிய நடனங்களுடன் கூடிய நாடகத்தை அரங்கேற்றி அனைவரையும் மகிழ்வித்தனர்.

21.06.2026 ஞாயிற்றுக்கிழமை இரண்டாம் நாள் காலை அமர்வு, பெண்களின் வேத கோஷத்துடன் தொடங்கியது. ஈரோடு மாவட்ட பஜனைப் பயிற்சிக்குழு ஒருங்கிணைப்பாளர் குமாரி சத்யபிரியதர்ஷினி அவர்கள் பஜனைக் குழுவின் செயல்பாடுகள் குறித்து உரையாற்றினார். அதனைத் தொடர்ந்து ஈரோடு மாவட்ட மகளிர் மற்றும் பாலவிகாஸ் மாணவிகள் இணைந்து “அனந்த ரூபம் ஏக தத்துவம்” என்ற தலைப்பில் பக்திப் பாடல்களைப் பாடி சாய் அன்னைக்குப் பாமாலை சூட்டினர்.

இரண்டாம் நாள் மாலை அமர்வு, ஆண்களின் வேத கோஷத்துடன் தொடங்கியது. மாவட்டத் துணை கலாச்சார ஒருங்கிணைப்பாளர் திரு. ஆர். விஜய் பாலாஜி அவர்கள் கலாச்சார நிகழ்ச்சிகளின் செயல்பாடுகள் குறித்து உரையாற்றினார்.

அடுத்து, 80-க்கும் மேற்பட்ட பாலவிகாஸ் சிறுமிகள் “அறுபடை வீடு காட்டும் அருட்பாதை - அனைவரையும் நேசி, அனைவருக்கும் சேவை புரி” என்ற தலைப்பில் நடன நாடகம் நிகழ்த்தினர். இதில் முருகப் பெருமானின் பெருமைகளை விளக்கும் வகையில் ஆறு வகையான சிறப்பு நடனங்களை ஆடி, பகவானின் தத்துவத்தை அழகாக எடுத்துரைத்தனர்.

இரு நாட்களின் மாலை அமர்வுகளும் பஜனை மற்றும் மங்கள ஆரத்தியுடன் மிகச் சிறப்பாக நிறைவடைந்தன. பகவானின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்களின் போது இந்த 6-வது பர்த்தி யாத்திரையைச் சிறப்பாகப் பூர்த்தி செய்ய அருளியதற்கும், ஈரோடு மாவட்டத்தின் மீது தமது அளவில்லா அருளைத் தொடர்ந்து பொழிந்ததற்கும் இறைவனின் பாதாரவிந்தங்களில் பக்தர்கள் தங்களது அனந்த கோடி நமஸ்காரங்களைச் சமர்ப்பித்தனர்.





# சிறப்பு பஜனை மற்றும் நாராயண சேவை

ஈரோடு | 10.06.2026 | 29 சேவாதளத்தொண்டர்கள்

சுவாமியின் திருவருளால், 10.06.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று பேபி நிகேதனாவின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, சத்தியமங்கலம் ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதியில் மதியம் 12 மணிக்கு சிறப்பு பஜனையும், அதனைத் தொடர்ந்து சிறப்பு நாராயண சேவையும் சிறப்பாக நடைபெற்றன.

இந்நிகழ்ச்சியில் 18 ஆண்கள், 9 மகிளாக்கள் மற்றும் 2 குழந்தைகள் என மொத்தம் 29 பேர் கலந்து கொண்டனர். இந்த நாராயண சேவையின் மூலம் 130 பேர் பயனடைந்தனர்.





# கொடைக்கானலில் யுவதியர் மாநாடு

ஈரோடு | 7 சேவாதளத்தொண்டர்கள்

நமது இறைவனின் அருளால், கொடைக்கானலில் நடைபெற்ற யுவதியர் மாநாட்டில் ஈரோட்டைச் சேர்ந்த 7 பேர் கலந்து கொள்ளும் சிறப்பு வாய்ப்புக் கிடைத்தது. “மகிழ்ச்சி என்பது இறைவனுடன் இணைந்து இருப்பது” என்ற மையக்கருத்தின் கீழ் இந்த மாநாடு மூன்று நாட்கள் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

ஜூன் 12 அன்று நடைபெற்ற முதல் நாள் மாநாட்டில் பல்வேறு முக்கிய ஆன்மீக விஷயங்கள் குறித்துக் கலந்துரையாடப்பட்டன. குறிப்பாக பிரம்மனும் உண்மையும், மாற்றத்திற்கான பயணம், சாயி இளைஞர்களின் குறிக்கோள் மற்றும் நான்கு இலட்சியங்கள் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

மேலும் ஆனந்தம் மற்றும் மகிழ்ச்சிக்கான வித்தியாசம், கடவுளுடன் வாழ்தல், வெற்றிக்கான முக்கிய தகுதிகள், சுயநலமற்ற சேவை, தனிமனித சாதனா மற்றும் இறைவனுக்கு நாம் எதைக் கொடுக்க வேண்டும் போன்ற பல அரிய கருத்துகளும் முதல் நாளில் விவாதிக்கப்பட்டன.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாம் நாள் மாநாட்டில் சேவையின் மகத்துவம் குறித்துப் பேசப்பட்டது. சாயி

சேவையே ஆனந்தம், சேவை மிக முக்கியமானது, அதனைத் தொடர்ந்து செய்ய வேண்டும் மற்றும் வாய்ப்புக் கிடைக்கும் போது பர்த்தி சேவைக்குச் செல்ல வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது.

மேலும், நாம் இங்கு வந்திருப்பது இறைவனின் இணைப்பைப் பெறுவதற்கு என்பதை உணர்த்தும் வகையிலும், இறைவன் எப்பொழுதும் நம்மைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கிறார் என்பதையும் மையமாக வைத்து ஆலோசிக்கப்பட்டது.

‘எதற்குப் பயம் நான் இங்கிருக்கும் பொழுது’ என்ற சுவாமியின் வாக்கினை நினைவு கூர்ந்து, ஆன்மீக வளர்ச்சி குறித்த பல ஆழமான கருத்துகளும் இந்த மாநாட்டில் விவாதிக்கப்பட்டு அனைவரும் பயன்பெற்றனர்.



# சிறப்பு நாராயண சேவை

ஈரோடு | 28.06.2026
120 பயனாளிகள் | 20 சேவாதளத்தொண்டர்கள்

சுவாமியின் திருவருளால், கடந்த 28.06.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று நண்பகல் 12 மணிக்குச் சத்தியமங்கலம் ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதியில் சிறப்பு நாராயண சேவை சிறப்பாக நடைபெற்றது.

திரு. வெங்கட சுப்ரமணியன் அவர்களின் குடும்பத்தின் சார்பில் இந்த நாராயண சேவைக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இதில் 12 ஆண்கள், 6 மகிளாக்கள் மற்றும் 2 குழந்தைகள் என மொத்தம் 20 பேர் கலந்து கொண்டு சேவையாற்றினர். அன்புடன் செய்யப்பட்ட இந்த நாராயண சேவையின் மூலம் 120 பேர் உணவு பெற்றுப் பயனடைந்தனர்.



# மாவட்ட அளவிலான சிறப்பு கலந்தாய்வுக் கூட்டம்

ஈரோடு 28.06.2026

சுவாமியின் பெருங்கருணையால், 28.06.2026 அன்று சித்தோடு ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதியில் மாவட்ட அளவிலான பொறுப்பாளர்கள், சமிதி கன்வீனர்கள் மற்றும் அனைத்து சமிதிப் பிரிவு பொறுப்பாளர்கள் பங்கேற்ற ஒருங்கிணைந்த சிறப்பு கலந்தாய்வுக் கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. கூட்டத்திற்கு முன்னதாக அனைவருக்கும் சுவையான அன்னதானம் வழங்கப்பட்டது.

ஈரோடு மாவட்டத் தலைவர் திரு. அண்ணாமலை மற்றும் அகில இந்திய கிராம சேவை பொறுப்பாளர் திரு. ராஜேந்திரன் ஆகியோர் தலைமையில், மதியம் 1.30 மணிக்கு பஜனையுடன் கூட்டம் இனிதே தொடங்கியது. இதில் அனைத்துப் பிரிவு மாவட்டப் பொறுப்பாளர்கள் மற்றும் சமிதி கன்வீனர்கள், தங்கள் பகுதிகளில் நடைபெறும் மற்றும் திட்டமிடப்பட்டுள்ள நிகழ்வுகளைப் பற்றி விரிவாக எடுத்துரைத்தனர்.

கூட்டத்தில் பல முக்கிய சேவைகளை விரிவுபடுத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டது. குறிப்பாக, நேரலை மற்றும் சமிதி வாயிலாகப் பஜனைப் பயிற்சி அளித்தல், பாலவிகாஸ் மையங்களின் எண்ணிக்கையை அதிகரித்தல், பிரேமதரு

மரக்கன்றுகள் நடும் பணியை விரிவுபடுத்தி அதற்கெனச் சிறப்புப் பொறுப்பாளரை நியமித்தல் ஆகிய முடிவுகள் எடுக்கப்பட்டன. மேலும், பர்த்தி சேவைக்கு அதிக அளவில் உறுப்பினர்கள் கலந்து கொள்வதை உறுதி செய்யவும் வலியுறுத்தப்பட்டது.

அனைத்து சமிதிகளிலும் வாரந்தோறும் ஒரு பஜனை, நகரசங்கீர்த்தனம் மற்றும் தவறாமல் நாராயண சேவை ஆகியவற்றை கட்டாயம் நடத்த வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. ‘சாயி லிக்விட் லவ்’ (Sai Liquid Love) எனப்படும் இரத்த தான சேவைக்கு மாவட்ட அளவில் அதிக பொறுப்பாளர்கள் தேவைப்படுவதால், அது குறித்தும் விவாதிக்கப்பட்டது. மூலப்பாளையம் திரு. சிவக்குமார் அவர்கள் இரத்த தான சேவை குறித்தும், மாவட்டத் தலைவர் அவர்கள் புதிய பொறுப்பாளர்கள் நியமனம் குறித்தும் விரிவான அறிக்கை பதிவு செய்வார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தின் மிக முக்கிய அம்சமாக, ஆகஸ்ட் 1-ஆம் தேதி ஈரோட்டிற்கு வருகை தந்து 25 நாட்கள் தங்கவுள்ள பிரேம ரதம் குறித்த அறிவிப்பு வெளியிடப்பட்டது. இதற்கான ஏற்பாடுகளை ஒவ்வொரு சமிதியும் உடனடியாகச் செய்ய வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. பிரேம ரத வருகைக்கான சமிதி வாரியான கால அட்டவணை, வழிகாட்டுதல்கள் மற்றும் விதிமுறைகள் குறித்து திரு. அண்ணாமலை மற்றும் திரு. ராஜேந்திரன் ஆகியோர் விளக்கமாக எடுத்துரைத்தனர்.

இந்த நிகழ்வுகளுக்கெனப் பிரத்தியேக வாட்ஸ்அப் குழு (WhatsApp group) ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இன்னும் ஓரிரு நாட்களில் மாவட்டத் தலைவர் இதற்கான விரிவான அறிக்கையை வெளியிடுவார். அனைவரும் ஒற்றுமையுடன் இணைந்து, சமிதிகள் மற்றும் தத்தெடுக்கப்பட்ட கிராமங்களுக்குப் புனித பிரேம ரதத்தில் எழுந்தருளும் நம் அன்பு சுவாமியைப் பெருந்திரளாகக் கலந்து கொண்டு வரவேற்று இறையருளைப் பெறுவோம் எனக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.





# பௌர்ணமி பூஜை மற்றும் மிருத்யுஞ்சய ஹோமம்

ஈரோடு 29.06.2026

பகவானின் பெருங்கருணையால், 29.06.2026 திங்கட்கிழமை அன்று காலை சித்தோடு சமிதியில் பௌர்ணமி பூஜை மற்றும் மிருத்யுஞ்சய ஹோமம் ஆகியவை பக்திபூர்வமாக நடைபெற்றன.

இத்தகைய சிறப்பானதொரு ஆன்மீக நிகழ்வில் கலந்து கொண்டு பயன்பெறுவதற்கான நல்வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்த பகவானுக்கு அன்பர்கள் தங்களது அனந்த கோடி நமஸ்காரங்களைச் சமர்ப்பித்தனர்.





# பஜனைப் பயிற்சி வகுப்பு

ஈரோடு 29.06.2026

நமது ஈரோடு மாவட்டம் சித்தோடு சமிதியில், தேசிய கிராமப்புற சேவை ஒருங்கிணைப்பாளர் இல்லத்தில் சத்ய சாயி பஜனைப் பயிற்சி மிகச் சிறப்பாக நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட அனைவரும் மிகவும் ஆர்வத்துடன் பஜனைப் பாடல்களைக் கற்றுக் கொண்டனர்.

இப்பயிற்சி வகுப்பில் திரு. சாய் பிரசாத், திரு. லேனா ராமநாதன் மற்றும் மதன் சாய் ஆகியோர் சிறப்புப் பயிற்சியாளர்களாகக் கலந்து கொண்டு, வந்திருந்தவர்களுக்குச் சிறந்த முறையில் பயிற்சி அளித்தனர்.

பயிற்சியின் போது, செல்போனில் உள்ள சுருதி செயலியைப் (Shruthi App) பயன்படுத்தித் தினமும் ஓங்காரத்தைப் பயிற்சி செய்யும் முறை குறித்து விளக்கப்பட்டது. இந்த ஓங்காரப் பயிற்சியானது மற்ற பஜனைப் பாடல்களைப் பாடுவதற்கும் மிகவும் உதவியாக இருக்கும் என்று வழிகாட்டப்பட்டது.

இவ்வாறு சுருதியைப் பயன்படுத்திப் பாடிப் பழகினால், பாடகர்களால் நல்ல நம்பிக்கையுடனும் இனிமையாகவும் பாட இயலும் என்று பயிற்சியாளர்கள் கூறினர். மேலும், ஒவ்வொரு பாடலையும் குறைந்தபட்சம் நூறு முறையாவது

பாடிப் பயிற்சி செய்ய வேண்டும் என்றும் அன்பர்களுக்கு வலியுறுத்தப்பட்டது.



# முதியோர் இல்லத்தில் பஜனை

காஞ்சிபுரம் வடக்கு | 20.06.2026 | 25 பயனாளிகள் | 30 சேவாதளத்தொண்டர்கள்

நமது சுவாமியின் நல்லாசியுடன், ஜூன் 20-ஆம் தேதியன்று முதியோர் இல்லத்தில் பஜனை நிகழ்ச்சி மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இதில் அங்குள்ள முதியவர்கள் அனைவரும் மிகுந்த ஆர்வத்துடனும் மகிழ்ச்சியுடனும் கலந்து கொண்டனர்.

ஒவ்வொரு மாதமும் இரண்டாவது சனிக்கிழமையன்று இந்த முதியோர் இல்லத்தில் மடிப்பாக்கம் சமிதி பக்தர்களால் இத்தகைய பஜனை நிகழ்ச்சி தொடர்ந்து நடத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# கண்புரை அறுவை சிகிச்சை முகாம்

காஞ்சிபுரம் வடக்கு | 21.06.2026 | 33 பயனாளிகள் | 44 சேவாதளத்தொண்டர்கள்

நமது சுவாமியின் நல்லாசியுடன், ஜூன் 21-ஆம் தேதியன்று மடிப்பாக்கம் ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதி மற்றும் சங்கரா கண் மருத்துவமனை ஆகியவை இணைந்து கண்புரை அறுவை சிகிச்சை முகாமைச் சிறப்பாக நடத்தின.

இந்த மருத்துவ முகாமில் மொத்தம் 44 நபர்கள் கலந்து கொண்டு கண் பரிசோதனை செய்து பயனடைந்தனர்.

இவர்களில் கண்புரை உள்ளதாகக் கண்டறியப்பட்ட 9 நபர்களுக்கு வெற்றிகரமாக அறுவை சிகிச்சை முடிந்து, அவர்கள் அனைவரும் முழுமையாக நலம் பெற்றனர்.

# தையல் பயிற்சி வகுப்பு தொடக்கம்

காஞ்சிபுரம் வடக்கு | 24.06.2026 | 33 பயனாளிகள் | 45 சேவாதளத்தொண்டர்கள்

நமது சுவாமியின் நல்லாசியுடன், ஜூன் 24-ஆம் தேதியன்று மடிப்பாக்கம் ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதியில் 42-வது பிரிவுக்கான தையல் பயிற்சி வகுப்பு இனிதே தொடங்கியது.

இந்தத் தையல் பயிற்சி வகுப்பில் மொத்தம் 45 நபர்கள் மிகுந்த ஆர்வமுடன் கலந்து கொண்டனர்.

# பள்ளி உபகரணங்கள் வழங்கும் சேவை

காஞ்சிபுரம் வடக்கு | 21.06.2026 | 15 பயனாளிகள் | 45 சேவாதளத்தொண்டர்கள்

ஸ்ரீ சத்ய சாயி சேவா அமைப்புகள், இந்தியா, தமிழ்நாடு தெற்கு, காஞ்சிபுரம் வடக்கு, பல்லாவரம் சமிதி சார்பில் “பள்ளிக்குத் திரும்புவோம்” என்ற தலைப்பில் பள்ளி உபகரணங்கள் வழங்கும் சேவை சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சி ஓம் காரம் மற்றும் வேதப் பாராயணத்துடன் இறையருளை வேண்டித் தொடங்கியது. அதனைத் தொடர்ந்து பக்தி நிறைந்த பஜனைகள் நடைபெற்றன. பின்னர் சமிதி ஒருங்கிணைப்பாளர் உரையாற்றி, கல்வியின் மகத்துவத்தையும், “கல்வி என்பது வாழ்க்கைக்காக; வாழ்க்கையை நடத்துவதற்காக மட்டுமல்ல, சேவை செய்வதற்காகவும்” என்ற பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் உயரிய போதனையையும் எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியில் ஜீவ ஜோதி அறக்கட்டளையின் பார்வைத்திறன் குறைபாடுடையோர் குழுவைச் சேர்ந்த 8-ஆம் வகுப்பு மாணவர்களுக்குப் பள்ளி உபகரணங்கள் அன்புடன் வழங்கப்பட்டன. ஒவ்வொரு கல்வித் தொகுப்பிலும் தலா 5 நோட்டுப் புத்தகங்கள், ஜியோமெட்ரி பாக்ஸ், பள்ளிப் பை மற்றும் பேனா ஆகியவை இடம்பெற்றிருந்தன.

நிகழ்ச்சி மங்கள ஆரத்தியுடன் நிறைவுபெற்றது. அதனைத் தொடர்ந்து நாராயண சேவை நடைபெற்றது. இச்சேவைக்காக மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் அனைவரும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்தனர். பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் “அன்பே இறைவன் – வாழ்வே செய்தி”, “அனைவரையும் நேசியுங்கள் – அனைவருக்கும் சேவை செய்யுங்கள்” மற்றும் “எப்போதும் உதவுங்கள் – ஒருபோதும் காயப்படுத்தாதீர்கள்” ஆகிய தெய்வீகப் போதனைகளை நடைமுறைப்படுத்தும் விதமாக இந்த நிகழ்ச்சி அமைந்தது.

# கிராமிய பாலவிகாஸ் மையம் தொடக்கம்

காஞ்சிபுரம் வடக்கு | 13.06.2026 | 2 பயனாளிகள் | 30 சேவாதளத்தொண்டர்கள்

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் அருளாசியுடன், ஸ்ரீ சத்ய சாயி சேவா அமைப்புகள், தமிழ்நாடு தெற்கு, காஞ்சிபுரம் வடக்கு, பல்லாவரம் சமிதி சார்பில், இரண்டாவது கிராமிய பாலவிகாஸ் மையம் 13.06.2026 சனிக்கிழமை அன்று பல்லாவரத்தில் உள்ள ஓம் சக்தி விநாயகர் ஆலய வளாகத்தில் இனிதே தொடங்கப்பட்டது.

இம்மையத்தைத் தொடங்குவதற்கு முன்னதாக, சமிதியின் கல்வி ஒருங்கிணைப்பாளர் அப்பகுதியில் உள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் நேரில் சென்று, பெற்றோர்களிடம் பாலவிகாஸ் கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்துக் குழந்தைகளை வகுப்பில் இணைக்க ஊக்குவித்தார்.

தொடக்க நாளன்று, குழந்தைகள் தாங்களாகவே முன்வந்து சாதனா முகாமாக ஆலய வளாகத்தைச் சுத்தம் செய்தனர். மேலும், பகவானின் பீடம் அமைத்தல், கோலம் போடுதல் மற்றும் நிகழ்ச்சிக்குத் தேவையான இதர ஏற்பாடுகளைப் பக்தியுடன் செய்தனர். குழந்தைகளின் இத்தகைய ஆர்வமும் சேவை மனப்பான்மையும் அங்கிருந்த அனைவரையும் மகிழ்ச்சியடையச் செய்தது.

தற்போது, இம்மையத்தில் ஆண் மற்றும் பெண் குழந்தைகள் என மொத்தம் 30 மாணவர்கள் பயின்று வருகின்றனர். சமிதியின் கல்வி ஒருங்கிணைப்பாளருடன் இணைந்து, ஒரு இளைஞர் சேவாதளரும் வகுப்புகளைச் சிறப்பாக நடத்துவதில் உறுதுணையாகச் செயல்பட்டு வருகிறார்.

மேலும், சமிதி உறுப்பினர்களின் பங்களிப்புடன் ஒவ்வொரு வகுப்பிற்குப் பின்னரும் நாராயண சேவை வழங்கப்பட்டு வருகிறது. குழந்தைகளின் முழுமையான வளர்ச்சிக்காகவும், அப்பகுதி மக்களின் நலனுக்காகவும் எதிர்காலத்தில் பல்வேறு கல்வி, ஆன்மிக மற்றும் சேவைச் செயல்பாடுகளை மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது. பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் மனிதநேயக் கல்வி (Educare) கொள்கைகளை கிராமப்புற குழந்தைகளிடையே விதைக்கும் ஒரு சிறப்பான முயற்சியாக இந்த மையம் செயல்பட்டு வருகிறது.

## சர்வதேச யோகா தினச் சிறப்பு நிகழ்ச்சி

காஞ்சிபுரம் வடக்கு | 20.06.2026 | 2 பயனாளிகள் | 14 சேவாதளத்தொண்டர்கள்

சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு, ஸ்ரீ சத்ய சாயி சேவா அமைப்புகள், தமிழ்நாடு தெற்கு, காஞ்சிபுரம் வடக்கு, பல்லாவரம் சமிதியின் சார்பில் பாலவிகாஸ் மாணவர்களுக்காகச் சிறப்பு யோகா நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் குழந்தைகள் பிராணாயாமப் பயிற்சிகளை ஆர்வத்துடன் மேற்கொண்டனர். மேலும், ஜோதி தியானத்திலும் ஈடுபட்டு மன ஒருமைப்பாட்டையும் அமைதியையும் வளர்த்துக்கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து, ஒவ்வொரு குழந்தையும் தங்களுக்குப் பிடித்த யோகாசனங்களைத் தன்னம்பிக்கையுடனும் உற்சாகத்துடனும் செய்து காண்பித்தனர். இந்த நிகழ்வு, உடல் ஆரோக்கியம், மன அமைதி மற்றும் ஆன்மீக முன்னேற்றம் ஆகியவற்றின் முக்கியத்துவத்தைக் குழந்தைகளுக்கு உணர்த்தும் வகையில் அமைந்தது.

யோகா என்பது வெறும் உடற்பயிற்சி மட்டுமல்ல; அது உடல், மனம் மற்றும் ஆன்மாவை ஒருங்கிணைக்கும் வாழ்க்கை முறை என்பதை குழந்தைகள் அனுபவப்பூர்வமாகக் கற்றுக்கொண்டனர். “உடலை வளையுங்கள்; புலன்களைச்

சீர்படுத்துங்கள்; மனதை முடிவுக்குக் கொண்டு வாருங்கள்" (Bend the body, Mend the senses, End the mind) என்ற பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் அருள்வாக்கை நினைவூட்டும் வகையில் இந்த நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

# உலக யோகா தினக் கொண்டாட்டங்கள்

தூத்துக்குடி | 21.06.2026
29 பயனாளிகள் | 30 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பேரருளால், தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் சமிதியில் கடந்த ஜூன் 21-ஆம் தேதி உலக யோகா தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. கொடைக்கானல் குருமார் பயிற்சி வகுப்பில் வழங்கப்பட்ட யோகா புத்தகத்தைக் கொண்டு, மாணவர்களுக்குப் பயிற்சிகள் கற்பிக்கப்பட்டன. விலங்குகளின் பெயர்களைக் கொண்டு யோகாசனங்களுக்குப் பெயரிட்டுக் கற்றுக் கொடுத்தபோது, குழந்தைகள் மிகுந்த உற்சாகத்துடன் பங்கேற்றனர். யோகா செய்வதால் ஏற்படும் நன்மைகள் மற்றும் மன ஒருமைப்பாடு குறித்துக் குழந்தைகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது. இனிவரும் ஒவ்வொரு வகுப்பிலும் பத்து நிமிடமாவது யோகா பயிற்சி செய்யத் தீர்மானிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் 10 மாணவர்கள், 1 மாணவி, 3 பாலவிகாஸ் குருமார்கள் மற்றும் 1 பெற்றோர் கலந்து கொண்டனர். நிறைவாக அனைவருக்கும் சுவாமியின் பிரசாதம் வழங்கப்பட்டது.

இதேபோல், தூத்துக்குடி சமிதியிலும் யோகா தினத்தை முன்னிட்டு காலை 11.30 மணி முதல் 12.30 மணி வரை பாலவிகாஸ் மாணவர்களுக்கு யோகா பயிற்சி

வகுப்பு நடைபெற்றது. குரூப் 1, 2 மற்றும் 3 ஆகிய வகுப்புகளின் குருமார்கள் இப்பயிற்சியை முன்னின்று நடத்தினர். இதில் 15 மாணவர்கள் கலந்து கொண்டு, சூரிய நமஸ்காரம், வஜ்ராசனம் மற்றும் தடாசனம் போன்ற பயிற்சிகளைக் கற்றுக்கொண்டனர். இப்பயிற்சிகளைத் தங்கள் வீடுகளிலும் தினமும் மேற்கொள்ளுமாறு குழந்தைகளுக்கு அறிவுறுத்தப்பட்டது. யோகாசனங்களின் நன்மைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்திய இந்த நிகழ்வு, மாணவர்களிடையே யோகாவைத் தொடர்ந்து செய்யும் ஆர்வத்தை உருவாக்கியது. நிகழ்ச்சியின் இறுதியில் அனைவருக்கும் சுவாமியின் அருட்பிரசாதம் வழங்கப்பட்டது.





# பாலவிகாஸ் குருமார்களுக்கான பயிற்சி வகுப்பு

தூத்துக்குடி | 28.06.2026 | 116 பயனாளிகள்

பகவானின் பேரருளால், தூத்துக்குடி மாவட்ட அளவிலான பாலவிகாஸ் பிரிவு - 1 குருமார்களுக்கான பயிற்சி வகுப்பு கடந்த ஜூன் 28-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை அன்று, விளாத்திகுளம் அம்பாள் நகரில் உள்ள அம்பாள் வித்யாலயா மேல்நிலைப் பள்ளியில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மாவட்டத் தலைவர், சமிதி ஒருங்கிணைப்பாளர்கள், கல்வி மற்றும் ஆன்மீக ஒருங்கிணைப்பாளர்கள், பாலவிகாஸ் மாணவர்கள், முன்னாள் மாணவர்கள், பெற்றோர்கள், குருமார்கள் மற்றும் பள்ளித் தாளாளர், தலைமை ஆசிரியர் உட்பட ஆசிரியர்கள் எனப் பெருந்திரளானோர் கலந்துகொண்டனர். விருதுநகர், மதுரை, திருநெல்வேலி மற்றும் கோவில்பட்டி ஆகிய ஊர்களிலிருந்து வருகை தந்த பேச்சாளர்கள், பயிற்சியில் பங்கேற்றவர்களுக்கு உற்சாகமூட்டும் வகையில் உரையாற்றினார்கள்.

காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெற்ற இப்பயிற்சியில், பயிற்சியாளர்களுக்கு குழு செயல்பாடுகள் (Group activities) வழங்கப்பட்டு,

அதில் சிறப்பாகச் செயல்பட்டவர்களுக்குப் பரிசுகளும் வழங்கப்பட்டன. இப்பயிற்சி வகுப்பு குருமார்களுக்குப் பெரும் புத்துணர்ச்சியை அளித்ததுடன், அனைவரும் புதிய உற்சாகத்துடன் தங்களது ஊர்களுக்குத் திரும்பினார்கள். இந்த அருமையான பயிற்சி வகுப்பைச் சிறப்பாக நடத்திக் கொடுத்த பகவானின் பாதாரவிந்தங்களில் அனைவரும் தங்களின் மனமார்ந்த நன்றிகளைச் சமர்ப்பித்தனர்.





# 501-வது ஹோமியோபதி மருத்துவ முகாம்

தூத்துக்குடி | 07.06.2026
120 பயனாளிகள் | 40 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பேரருளால், தூத்துக்குடி கோவில்பட்டி ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதியில் 501-வது மருத்துவ முகாம் ஒரு சிறப்பு விழாவாகக் கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்வு பாலவிகாஸ் மாணவர்களின் வேத கோஷத்துடன் பக்திமயமாகத் தொடங்கியது. அதனைத் தொடர்ந்து, மாணவர்கள் அனைவரும் இணைந்து பஜனை பாடினர்.

இந்த விழாவில் சிறப்பு விருந்தினராக அனந்தப்பூர் கல்லூரியின் விரிவுரையாளர் திருமதி. இராஜேஸ்வரி அவர்கள் கலந்து கொண்டார். அவர் சேவையின் மகத்துவத்தையும் அதன் அவசியத்தையும் பாலவிகாஸ் குழந்தைகளுக்குப் புரியும் வகையில் எடுத்துரைத்தார்.

பல்வேறு சேவைப் பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபட்ட மாணவர்களை ஊக்கப்படுத்தும் விதமாக, சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இதில் 20 பாலவிகாஸ் மாணவர்கள் கலந்துகொண்டு சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டனர். இந்த மருத்துவ முகாம் மற்றும் விழா, சேவையின் சிறப்பை உணர்த்தும் வகையில் சிறப்பாக நிறைவடைந்தது.




ஸ்ரீ சத்ய சாய்
சேவா சமிதி
கோவில்பட்டி டவுன்

# உலக யோகா தினச் சிறப்பு நிகழ்ச்சி

தஞ்சாவூர் | 21.06.2026 | 45 பயனாளிகள்

பகவானின் பேரருளால், கடந்த ஜூன் 21-ஆம் தேதி உலக யோகா தினத்தை முன்னிட்டு, தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் சமிதியைச் சேர்ந்த பாலவிகாஸ் மையங்களில் சிறப்பு யோகா நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் பாலவிகாஸ் குழந்தைகள் அனைவரும் சூரிய நமஸ்காரம் உள்ளிட்ட பல்வேறு யோகாசனங்களை மிகுந்த ஆர்வத்துடன் செய்து காண்பித்தனர்.

இந்நிகழ்ச்சியின் மூலம் யோகாசனம் செய்வதால் ஏற்படும் நன்மைகள், உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் விளையும் நல்ல மாற்றங்கள் மற்றும் அதனால் கிடைக்கும் பலன்கள் போன்ற எண்ணற்ற ஆன்மீக, ஆரோக்கிய விஷயங்களை மாணவர்கள் அறிந்து கொள்ளும் நல்வாய்ப்பு ஏற்பட்டது.

தங்களது அன்றாட வாழ்வில் தினசரி யோகாசனம் செய்ய வேண்டும் என்ற உறுதியான வைராக்கியத்தை பாலவிகாஸ் மாணவர்களின் பிஞ்சு மனதில் ஆழமாக விதைக்க இந்த யோகா தின நிகழ்வு ஒரு சிறந்த வழிகாட்டியாக அமைந்தது.





# புதிய பாலவிகாஸ் வகுப்புகள் மற்றும் யோகா தினக் கொண்டாட்டங்கள்

சேலம் 08,21,27.06.2026
425 பயனாளிகள் 475 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் அருளால், சேலம் மாவட்டம் அம்மாப்பேட்டைப் பகுதியில் உள்ள சாய் சக்தி விவேகானந்தா பள்ளியில், புதிய பாலவிகாஸ் வகுப்பு ஜூன் 8, 2026 அன்று சிறப்பாகத் தொடங்கி வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, கங்கவள்ளி சமிதிக்கு உட்பட்ட தெடாவூர் பகுதியிலும் மற்றொரு புதிய பாலவிகாஸ் வகுப்பு ஜூன் 27, 2026 அன்று தொடங்கப்பட்டது.

சாய் சக்தி விவேகானந்தா பள்ளியில் நடைபெற்ற தொடக்க விழாவில் 400 மாணவ மாணவிகள் பங்கேற்றனர். அதேபோல், தெடாவூர் வகுப்பில் 25 மாணவ மாணவிகள், 40 பெற்றோர்கள், 5 குருமார்கள், 2 புதிய குருமார்கள், 2 கல்வி ஒருங்கிணைப்பாளர்கள், 2 கன்வீனர்கள் மற்றும் மாவட்டத் தலைவர் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இதனிடையே, ஜூன் 21, 2026 அன்று சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு, சேலம் டவுன் சமிதி மற்றும் சூரமங்கலம் சமிதிகளில் பாலவிகாஸ் குழந்தைகளுக்கான சிறப்பு யோகா பயிற்சி நடைபெற்றது. இதில் 2 குருமார்கள் மற்றும் 30 மாணவர்கள் கலந்து கொண்டு,

பல்வேறு உடற்பயிற்சிகளைக் கற்றுத் தேறினர். பகவானின் போதனைகளின்படி, குழந்தைகளின் உடல் மற்றும் மன நலனை மேம்படுத்தும் இத்தகைய நடவடிக்கைகள் சேலம் மாவட்டத்தில் உற்சாகத்துடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.





# சேவா வாணி

எதிர் வரும் மாதங்களில் தங்கள் மாவட்ட முக்கிய நிகழ்வுகள் இந்த மின் துணை இதழில் இடம் பெற, தெளிவான புகைப்படங்களுடன், தமிழில் நிகழ்ச்சி பற்றிய சிறு குறிப்புடன், மாவட்டத் தலைவர் வழியாக

**ssssotnreporting@gmail.com**

முகவரிக்கு அஞ்சல் அனுப்பவும்.

### முக்கிய இணைப்புகள்

**ஸ்ரீ சத்ய சாய் தமிழ்**

**Sri Sathya Sai Media Centre**

**ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவனங்கள் (இந்தியா)**

**தமிழ்நாடு - தெற்கு**